18—

அரசு இரப்பர் கழகம்

***12124—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகத்தில் வனத் துறை அதிகாரிகள் அயற்பணி முறையில் பணியாற்றி வருகிறார்களா?

(ஆ) எத்தனைபேர் பணியாற்றுகிறார்கள்?

(இ) இவர்களுக்கு அதிகப்படியாக ஏற்படும் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு இரப்பர் கழகத்தில் 17 வனத் துறை அதிகாரிகள் அயற்பணி முறையில் பணியாற்றி வருகிறார்கள்.

(இ) இவர்களுக்குச் சம்பளம் வழங்கும் வகையில் அரசு இரப்பர் கழகத்திற்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.37,68,000/- செலவாகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் கழகத்தில் 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 40 ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் வாங்குகிற 50-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தகவல். இப்படி இந்த ஊழியர்கள் சம்பளம் காரணமாக 50 லட்சத்திற்கு அதிகமான செலவு அதிகப்படியாக அரசு இரப்பர் கார்ப்பரேஷனுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றும், இந்த நிதிநிலை மோசம் என்ற காரணத்தைக் காட்டி பஞ்சப்படி உயர்வு கூடத் தொழிலாளிகளுக்குக் கொடுப்பதற்கு நிருவாகம் முடியாமல் இருக்கிற நேரத்திலே, அதேபோன்று தொழிலாளிகளுக்கு மற்றும் பல சலுகைகளைக் கொடுக்க முடியாமலும் இருக்கின்ற நேரத்திலே, இந்த அயற்பணி முறையிலே பணியாற்றி வருகிறவர்களை அங்கிருந்து வாபஸ் பெற்று இந்த நிதியில் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

2003 நவம்பர் 3]

நண்பகல் 12-00

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் 106 அயற்பணியாளர்களால் ஏற்படும் சம்பளச் செலவினம் ஆண்டுக்கு ரூபாய் 1.18 கோடி ஆகும். மேலும் அயற்பணியில் இருப்பவர்கள் அனைவரையும் தாய்த் துறைக்கு அனுப்பிவிட்டு கழகப் பணியாளர்களை வைத்துக்கொண்டு முழுமையாகப் பார்க்க இயலாது; கழகப் பணி பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும் இதுகுறித்து ஆய்வு செய்து அயற்பணியில் உபரியாக உள்ளவர்களைத் தெரிவு செய்து தாய்த் துறைக்குத் திரும்ப அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 20,000-க்கு மேலே, ரூபாய் 40,000-க்குள்ளே சம்பளம் வாங்குகிற மூன்று பெரிய I.F.S. அதிகாரிகள் அங்கே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இப்படி மூன்று பெரிய சம்பளம் வாங்குகிற அதிகாரிகள் தேவைதானா என்று அரசு பரிசீலித்து, ஒரு மேனேஜிங் டைரக்டர், ஒரு சேர்மன் என்ற முறையிலே வைத்திருப்பதற்குப் பதிலாக, ஒரு அதிகாரியை இந்த நிர்வாகப் பொறுப்பிலே வைத்துக்கொண்டு அரசு செலவினத்தைக் குறைப்பதற்காக நடவடிக்கை எடுத்து, தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பஞ்சப்படி உயர்வு, அதேபோன்று மற்ற உரிமைகளைக் கொடுப்பதற்கு அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.
19—

மாநகராட்சியிடம் ஒப்படைத்தல்

***3400—திரு. மு. கார்த்தி:**
மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—